எஸ்.சந்திரமௌலி



# தத்து எடுக்கத் தடை

அண்மையில் நெதர்லாந்து அரசாங்கம் அந்த நாட்டுக் குடிமக்கள், மற்ற நாடுகளிலிருந்து குழந்தைகளைத் தத்து எடுப்பதற்குத் தடை விதித்துள்ளது. அரசு நியமித்த குழு அளித்த புலனாய்வு அறிக்கையின்அடிப்படையில் இப்படி ஒரு தடையை அமலாக்கி உள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நெதர்லாந்து அரசு எடுத்த சர்வதேசத் தத்து தடை






உத்தரவினை வெளியிட்டு, ‘இது விஷயமாக இதுவரை நடந்த தவறுகளுக்காகவும், அந்தத் தவறுகள் குறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காததற்காகவும் நான் மன்னிப்பு கோருகிறேன்’ என்று கூறி இருக்கிறார் அந்நாட்டு சட்ட அமைச்சர் சாண்டர் டெக்கர்.



அந்தப் புலனாய்வுக்குழு அறிக்கை என்ன சொல்கிறது தெரியுமா? நெதர்லாந்து தம்பதிகள் மற்ற நாடுகளிலிருந்து குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வதில் ஏகப்பட்ட தில்லுமுல்லுகள் நடந்துள்ளன என்று குற்றம் சாட்டுகிறது. சட்ட விதிமீறல்கள், லஞ்ச ஊழல், பொய்யான ஆவணங்களைப் பயன்படுத்தி, அரசாங்கங்களை ஏமாற்றியது என்று ஒரு பட்டியலே போடுகிறது. இவை மட்டுமில்லை; ஏழைப் பெற்றோர்களிடம் பணம் கொடுப்பதாக ஆசைகாட்டி, குழந்தைகளை வாங்கி, அந்தக் குழந்தைகளை அனாதைகள் என்று சொல்லி, ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களில் சேர்த்து, அங்கிருந்து ‘அனாதைக் குழந்தைகள்‘என்ற முத்திரையுடன் அயல்நாட்டுத் தம்பதிகளுக்கு தத்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும், அந்தக் குழந்தை வியாபாரத்தில் லட்சக்கணக்கில் பணம் கைமாறி இருப்பதாகவும் பகீர் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. நெதர்லாந்தைத் தொடர்ந்து சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளும் மற்ற நாடுகளில் இருந்து குழந்தைகளைத் தத்து எடுப்பதற்கு தடை விதிப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.

இந்தியா, இந்தோனேஷியா, ஸ்ரீலங்கா, பிரேசில், கொலம்பியா, பங்களாதேஷ் ஆகியவை உலகத்தில் மிக அதிகமாக குழந்தைகளைத் தத்து கொடுக்கும் நாடுகள். சர்வதேச தத்து கொடுக்கும் விவகாரத்தில், இந்த நாடுகள் அனைத்திலுமே நிழலான நடவடிக்கைகள் நிறைய நடப்பதாக வெகு காலமாகவே புகார்கள் இருந்து வருகின்றன. நெதர்லாந்து அதிரடியாக தத்துக்குத் தடை பிறப்பித்தவுடன் மற்ற நாடுகளும் விழித்துக் கொண்டுவிட்டன, நெதர்லாந்து அரசின் இந்த நடவடிக்கைக்கு இந்தியாவிலிருந்து சுமார் இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தத்து எடுத்துச் செல்லப்பட்ட இரு பெண்குழந்தைகள்தான் காரணம். பச்சிளம் குழந்தைகளாய் இந்தியாவில் இருந்து தத்து எடுத்துச் செல்லப்பட்ட அவர்கள் வளர்ந்து ஆளாகிவிட்டார்கள். ஒருவர் ஜோதி. வயது 37. இன்னொருவர் ரெஜினா. வயது 42. அவர்களது சட்ட ரீதியான அவர்களின் போராட்டம் தான், இன்று நெதர்லாந்து அரசு இப்படி ஒரு தடையை அமல்படுத்தத் தூண்டியது. அது மட்டுமில்லை, இந்தியாவில் இருந்து நெதர்லாந்து தம்பதிகளால் பல்லாண்டுகளுக்கு முன்பு தத்து எடுத்துச் செல்லப்பட்ட குழந்தைகள் பலரும் அந்நாட்டு கலாசாரச் சூழ்நிலையிலேயே வளர்ந்து, பெரியவர்களாகி விட்டனர். இன்று அவர்கள் அனைவரது மனதையும் குடைந்துகொண்டிருக்கும் ஒரே கேள்வி: தன்னைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் ஏன் இந்தியாவிலேயே தன்னை வளர்த்து ஆளாக்காமல், அன்னிய நாட்டு தம்பதியர்க்கு தத்து கொடுத்துவிட்டார்கள்? என்பது தான். இதனால், தங்களது உண்மையான பெற்றோர்கள் யார்? என்பதை எப்படியும்


சரஸ் பாஸ்கர்

கண்டுபிடிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டு, தன்னுடைய தத்து தொடர்பான ஆவணங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார்கள். அவர்களில் ஒரு சிலர் தங்களின் நிஜப் பெற்றோர்களைத் தேடி இந்தியாவுக்கு வந்ததும் உண்டு. ஆனால், அவர்களால் தங்கள் நிஜப் பெற்றோர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதில் இன்னொரு ஆச்சர்யம் என்னவெனில், இப்படி தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் பலரது பூர்வீக கதையும் ஒரே மாதிரியானது. சர்ச் வாசலில், அதிகாலையில் அல்லது இரவு நேரத்தில் ஒரு குழந்தை கிடக்கும். பாதிரியாரோ, கன்னியாஸ்திரியோ அதைக் குழந்தையை எடுத்துக் கொண்டுவந்து, தாங்கள் நடத்திவரும் அனாதை இல்லத்தில் சேர்ப்பார்கள். குழந்தையின் பெற்றோர்கள் குறித்த தகவல்கள் ஏதும் தெரியாது என்று



குறிப்பிட்டு அந்தக் குழந்தையின் பிறப்பு பற்றிய ஆவணம் தயாராகும். சிறிது காலத்தில், அந்த அனாதை இல்லத்தில் இருந்து, அந்தக் குழந்தை ஒரு அயல்நாட்டுத் தம்பதிக்கு தத்து கொடுக்கப்படும், இது ஆவணங்கள் சொல்லும் தகவல். ஆனால், உண்மையில் என்ன நடக்கும் தெரியுமா? அயல்நாட்டுத் தம்பதிகளுக்கு தத்து கொடுப்பதற்காகவே, ஏழைப் பெற்றோர்கள் கண்டறியப்படுவார்கள். அவர்களிடம் நிறைய பணம் தருவதாகவும், 'உங்கள் குழந்தை இங்கே ஏழ்மையில் கஷ்டப்படாமல், கண் காணாத ஊரில் வசதியான குடும்பத்தில் வாழும்' என்று ஆசை வார்த்தைகள் கூறி மூளை சலவை செய்யப்படும். பணம் கைமாறியதும், குழந்தை சர்ச் வாசலில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போகும் சம்பவம் அரங்கேறும்.

அயல் நாடுகளுக்கு தத்து கொடுக்கப்படும் குழந்தைகள் வளர்ந்தபின் தங்கள் வேர்களைத் தேடி புறப்படுவது சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இப்படி தத்து கொடுக்கப்பட்டவர்கள் இணைந்து ஓர் அமைப்பு ஏற்படுத்தி தகவல் பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள். வேர்களைத் தேடிச் செல்லும் இந்த தத்துப் பிள்ளைகளுக்கு உதவ பல்வேறு நாடுகளிலும் சில டி.என்.ஏ. தொழில் நுட்ப வல்லுனர்களும், சட்ட நிபுணர்களும், தொண்டு நிறுவனங்களும் செயல்பட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சட்ட ரீதியிலான, விஞ்ஞான பூர்வமான இந்த வேர்களைத் தேடும் முயற்சியின் பயனாக, பல்லாண்டுகளுக்கு முன் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் பலரும் உண்மையில் தத்து கொடுக்கப்படவில்லை; போலி ஆவணங்கள் மூலமாக பணத்துக்கு விற்கப்பட்ட குழந்தைகள்தான் என்பது நிரூபணமாகி உள்ளது.

சர்வதேச தத்து தடை விவகாரம் குறித்துப் பேசுகையில் சென்னையைச் சேர்ந்த பிரபல மனநல ஆலோசகரான சரஸ் பாஸ்கர் சில கருத்துக்களை உறுதியாக எடுத்து வைக்கிறார்.



தற்போது சட்ட பூர்வமாக 'காரா' அமைப்பின் மூலமாக உள்நாட்டு, வெளிநாட்டு பெற்றோர்களுக்கு இந்தியக் குழந்தைகள் தத்து கொடுக்கப்படுகின்றனர். அது பற்றிய புள்ளி விபரம் இது:

| ஆண்டு | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| 2012-13 | 4694 | 308 |
| 2013-14 | 3924 | 430 |
| 2014-15 | 3988 | 374 |
| 2015-16 | 3011 | 666 |
| 2016-17 | 3210 | 578 |
| 2017-18 | 3276 | 651 |
| 2018-19 | 3374 | 653 |
| 2019-20 | 3351 | 394 |

''சர்வ தேச தத்து என்ற பெயரில் சில ஏஜென்சிக்கள் ஏழைக் குடும்பத்துக் குழந்தைகளை சர்வதேச சந்தையில் விற்பனை செய்வது இங்கே நடந்து கொண்டுதான் இருந்தது. ஆனால், 2014ல், தத்து எடுப்பதற்குரிய ஜெனிவா மாநாட்டு தீர்மானங்களின் அடிப்படையில் இந்திய அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளின் பயனாக அது சாத்தியமில்லாத ஒன்றாகிவிட்டது. இந்திய அரசாங்கம் தேசிய அளவில் 'காரா' Central Adoption Resource Authority (CARA) என்ற ஒரு மத்திய அமைப்பினை உருவாக்கியது.மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் இந்த அமைப்பு, தத்து எடுப்பது குறித்த நெறிமுறைகளை வகுத்துள்ளது. இதன் கிளைகள் மாநில அளவிலும் செயல்பட்டு வருகின்றன.

இப்போது, ஆன் லைன் மூலமாக காராவின் இணைய தளத்தில் தத்து எடுத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் தங்களைப் பற்றிய தகவல்களையும், தங்களின் தத்துக் குழந்தை குறித்த விருப்பங்களையும் பதிவு செய்ய வேண்டும். காத்திருப்போர் வரிசைப்படி, அவரவர்க்குரிய வாய்ப்புகள் வழங்கப்படும். அது மட்டுமில்லை; சமூகப்பணியாளர்கள் மூலமாக தத்து எடுத்துக்கொள்ள விரும்பும் பெற்றோர்களின் சமூக, பொருளாதார நிலை சரிபார்க்கப்படுகிறது. பெற்றோர்கள் அல்லது அவர்களது நெருக்கமான உறவினர்களில் யாரும் மது அல்லது போதை மருந்து பழக்கம் உள்ளவர்களா என விசாரணை நடக்கிறது. இன்னொரு பக்கம், மனநல ஆலோசகர்கள் மூலமாக, பெற்றோர்கள் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ள தயார்படுத்தப் படுகிறார்கள். சமூக சேவகர் மற்றும் மனநல ஆலோசகரது பரிந்துரையின்பேரில் அவர்களுக்கு குழந்தை தத்து கொடுக்கப்படுகிறது. இத்தகைய வெளிப்படையான நடவடிக்கைகளின் காரணமாக இந்தியக் குழந்தைகள் சர்வதேச நாடுகளுக்கு சட்டத்துக்குப் புறம்பாக தத்து கொடுப்பது அல்லது குழந்தைகள் விற்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. சட்டத்துக்குப் புறம்பாக நிழலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த பல தத்து குழந்தைகள் ஏஜென்சிக்கள் கடையை மூடும்படி ஆகிவிட்டது'' என்று விளக்குகிறார் சரஸ் பாஸ்கர்.